# பத்திரிக்கை செய்தி

## வீட்டு வரி நிர்ணயம் செய்ய ரூ.20,000/- லஞ்சம் வாங்கிய பில் கலெக்டர் மற்றும் தனிநபர் கைது

புகார்தாரர் திரு.மாணிக்கவாசகம், சனாபிராட்டி, கரூர் மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரரின் மனைவி பெயரில் புதிதாக கட்டிய வீட்டிற்கு வீட்டு வரி நிர்னயம் செய்ய 14வது வார்டு, நகராட்சி அலுவலகம் கரூர் மாவட்டத்தில் விண்ணப்பித்திருந்தார். திரு.ரவிசந்திரன், பில் கலெக்டர், 14 வது வார்டு, நகராட்சி அலுவலகம் கரூர் மாவட்டம் அவர்கள் புகார்தாரருக்கு வீட்டு வரி நிர்ணயம் செய்ய தனக்கு ரூ.20,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டுமென கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், கரூர் லஞ்ச ஒழிப்பு பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 07.03.2023, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.ரவிசந்திரன், பில் கலெக்டர், அவர்களின் உத்தரவின் பேரில் லஞ்ச பணம் ரூ.20,000/-யை அலுவலகத்தின் அருகில் டீ கடை வைத்துள்ள திரு.பாரதிராஜா வசம் புகார்தாரர் கொடுத்துள்ளார், பின்னர் திரு.ரவிசந்திரன், பில் கலெக்டர் லஞ்ச பணமான ரூ.20,000/-யை மேற்படி பாரதிராஜாவிடமிருந்து பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

**PRESS NOTE**

**BILL COLLECTOR AND PRIVATE PERSON ARRESTED FOR DEMAND AND OBTAINMENT OF BRIBE RS.20,000/- FOR FIXING HOUSE TAX**

The complainant Tr.Manickavasagam, is residing at Sanapiraty, Karrur District. The complainant had applied for fixing house tax to his newly constructed house in the name of his wife at office of the 14th ward, Municipal Corporation, Karur district, for which Tr.Ravichandran, Bill Collector, 14th Ward, Municipal Corporation, Karur District demanded Rs.20,000/- as bribe for processing his application. Not willing to give bribe, the complainant approached the Vigilance and Anti-Corruption, Karur detachment and gave complaint. In this connection a case was registered and a trap was organized. Today 07.03.2023, during the trap proceedings, the complainant on the instructions of the Tr.Ravichandran, Bill Collector, gave the bribe amount to one Tr.Bharathiraja, the nearby teashop owner. Tr.Ravichandran, Bill Collectoer, later collected the bribe money of Rs.20,000/- from the tea shop owner. Both the accused were arrested.